இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 345 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 09 – வெள்ளிக்கிழமை 25 ஜூலை 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 345 : Thiruvalluvar Year - 2056 - Aadi 09 - Friday 25 July 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00




சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.7.2025) மருத்துவமனையிலிருந்து காணொலிகாட்சி வாயிலாக, “உங்களுடன் ஸ்டாலின்” திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து கன்னியாகுமரி, காஞ்சிபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டபோது, “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் கலந்துகொண்ட பயனாளிகளிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்து கலந்துரையாடினார். இந்த ஆய்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### “உங்களுடன் ஸ்டாலின்” திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு!

## மருத்துவமனையிலிருந்து காணொலி வாயிலாகக் கேட்டறிந்தார் !

**சென்னை, ஜூலை 25 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வு செய்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை அப்பல்லோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்தபடியே அலுவலகப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

**முதல்வர் மூன்று மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனை!**

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.7.2025) காணொலி வாயிலாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர்.அழகு மீனா, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன் குமார் ஜி. கிரியப்பனவர் ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, முதலமைச்சர் அவர்கள் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்றும், முகாம்களுக்கு மனுக்களை அளிக்க வரும் மக்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியதோடு, இதுவரை அம்மாவட்டங்களில் நடத்தப்பட்ட முகாம்களின் எண்ணிக்கை, பெறப்பட்ட மனுக்களின் விவரங்கள் போன்றவை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டறிந்தார்.



சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.7.2025) தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் அவர்களிடம் பல்வேறு துறை சார்ந்த திட்டங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டு, முக்கிய கோப்புகளை பார்வையிட்டு ஒப்புதல் அளித்தார். இந்நிகழ்வின்போது, அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்த மக்கள்!**

அத்துடன் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் மனுக்கள் அளிக்க வருகை தந்த பயனாளிகளிடம் முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக கலந்துரையாடி, அவர்களது கோரிக்கைகளின் விவரங்கள் குறித்து கேட்டறிந்து, அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

“உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் கலந்து கொண்டு பயனடைந்த பயனாளிகள் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

**கோப்புகளை பார்வையிட்டு ஒப்புதல் அளித்த முதல்வர்!**

மேலும், அரசு தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் அவர்களிடம் பல்வேறு துறை சார்ந்த திட்டங்கள் குறித்து முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.

பல்வேறு கோப்புகளை பார்வையிட்டு ஒப்புதல் அளித்தார். இந்நிகழ்வின்போது, அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## விரைவில் உங்களைச் சந்திக்கிறேன்!

சென்னை, ஜூலை 24 -

மருத்துவமனையிலிருந்து நேற்று முன்தினம் (23.7.2025) காணொலி காட்சி வாயிலாக, “உங்களுடன் ஸ்டாலின்” திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்ட பிறகு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மருத்துவமனையில் இருந்தபடியே “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்கள் குறித்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பொதுமக்களிடம் கேட்டறிந்ததோடு; அரசுக் கோப்புகளிலும் கையெழுத்திட்டேன்.**

**மருத்துவர்கள் அறிவுறுத்திய ஓய்வுக்குப் பிறகு, விரைவில் உங்களைச் சந்திக்க உங்கள் மாவட்டங்களுக்கு வருவேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் – பஹல்காம் விவகாரம் குறித்து

# நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர் முழக்கம்!

சென்னை, ஜூலை 25 -

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் திங்கள் அன்று தொடங்கியது. முதல் நாளில் இருந்தே பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் மற்றும் பஹல்காம் தீவிரவாத தாக்குதல் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க அனுமதி கோரி எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், தொடர்ந்து அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் புதிய விதிமுறைகள் குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க. சார்பில் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நேற்று முன்தினம் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளிக்கப்பட்டது.

மக்களவை நேற்று முன்தினம் கூடியதும் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் மற்றும் பஹல்காம் விவகாரம் தொடர்பாக விவாதிக்க அனுமதிகோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கம் எழுப்பினர்.

இதன்காரணமாக மக்களவையில் கடும் அமளி ஏற்பட்டது. இதனையடுத்து, தொடங்கிய சில நிமிடங்களிலேயே மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.



பின்னர் மீண்டும் அவை கூடிய போதும் அமளி தொடர்ந்ததால் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

இதேபோல், மாநிலங்களவையிலும் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் மற்றும் பஹல்காம் விவகாரம் தொடர்பாக குரல் எழுப்பப்பட்டது. இதனால் அங்கும் கடும் அமளி ஏற்பட்டது. மாநிலங்களவையும், தொடங்கிய சில நிமிடங்களிலேயே ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை மீண்டும் கூடியபோதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கம் எழுப்பியதால் அமளி நீடித்தது. இதனால் மாநிலங்களவையும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

**ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் முழக்கம்!**

இதற்கிடையே, வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்படுவதை கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் 3வது நாளாக நேற்று முன்தினமும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு கண்டனம் தெரிவித்து முழக்கங்களை எழுப்பினர்.

மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர். தி.மு.க. எம்.பிக்கள் அனைவரும் கருப்பு உடை அணிந்து போராட்டத்தில் பங்கேற்றனர்.